## அட்டவணை II

### மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாகக் கருதுவதற்கான நியாயப்பாடு

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53(5) ஆம் பிரிவின் ஏற்பாடுகளான தேசிய நலன் அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு, கொழும்பு துறைமுக நகரத்தை நிறுவுதலின் வெற்றியை உறுதி செய்வதற்காக, இவ்வணிகத்தை மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகமொன்றாக பெயரிடும்போது குறித்த சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் நோக்கங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

ஐக்கிய அரபு அமீரகத்தை (UAE) தளமாகக் கொண்ட வொல்டினோ எல்எல்சீ ( Vaultino LLC) என்பது ஷார்ஜா ஊடக நகர வர்த்தக வலயத்தின் (Sharjah Media City Free Zone) கீழ் பதிவுசெய்யப்பட்ட எண்ணிம சேவை நிறுவனமொன்றாகும். பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டுத் துறையினருக்கான எண்ணிம உதவிச் சேவைகளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாகத் திகழும் நோக்குடன் நிறுவப்பட்ட வொல்டினோ (Vaultino) நிறுவனம், அதிவேகமாக வளர்ந்து வரும் எண்ணிம சூழல் அமைப்புகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட உயர்தர விசேடத்துவ பின் அலுவலகசேவைகளை வழங்குகிறது.

விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குச் சூழல் அமைப்பில் உள்ள தனது சர்வதேச வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றுவதற்காக, வொல்டினோ (Vaultino) நிறுவனம் தனது உலகளாவிய விநியோகம் மற்றும் செயல்பாட்டுத் தலைமையகத்தை கொழும்பு துறைமுக நகரத்திற்குள் அமைக்க முயல்கிறது. இவ் வசதியானது அதன் உலகளாவிய சேவை விநியோகத்திற்கான மத்திய மையமாக அமைவதோடு, விரிவான சேவைத்திறன், திறன்மிகு மனித மூலதனம் மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த செலவுக் கட்டமைப்பு ஆகியவற்றை வழங்கும்.

## அட்டவணை III

| *அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவாக்கங்கள்* | | *வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* | *ஆரம்பமாகும் திகதி* | *முடிவடையும் திகதி* |
|---|---|---|---|---|
| 1 | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ், அனைத்து ஆதாயங்கள் மற்றும் இலாபங்கள் மீதான கூட்டிணைக்கப்பட்ட வருமான வரியானது, 7.5% எனும் சலுக வரி வீதத்தில் அறவிடப்படும் | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் திகதி. | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 4 ஆண்டுகளில் |
| 2 | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 3 | 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 4 | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

